ஆகஸ்ட் 4

# *புனித மரிய வியான்னி அருளப்பர் (1786-1859)*

இவர் பத்தொன்பது வயது வரை நிலத்தை உழுது பயிரிட்டு வந்தவர். குருவாக விரும்பி கல்வி கற்கச் சென்றார். இவரால் கல்வி கற்க முடியவில்லை. எனவே குருப்பட்டம் அளிக்க ஆசிரியர்கள் விரும்பவில்லை. மறைமாவட்டத்தின் பெரிய குரு அவர்களை நோக்கி "இந்த மாணவனிடம் தேவதாய் மீது பக்தி உண்டா?" என்று கேட்டார். ஆம் என்று பதில் கிடைத்தது. அப்படியானால் குருப்பட்டம் கொடுக்கலாம்எ ன, பெரிய குரு முயன்றார். சிறிது காலம் துணைக்குருவாக இருந்த பின் இவரை ஆர்ஸ் நகரின் பங்கு குருவாக்கினார். இவரை அங்கு அனுப்பிய பெரிய குரு இவரைப் பார்த்து, அந்த ஊர் மக்கள் கடவுளை நேசிப்பதே இல்லை. ஆகவே அவர்கள் உள்ளத்தில் தேவ சிநேகத்தை எழுப்பும் என்று சொன்னார். இவர் செபித்தார்; தவம் செய்தார். தம் ஊர் மக்களின் பாவங்களுக்காக தன்னையே தண்டித்தார். இறுதியாக மக்கள் மனந்திரும்பினார்கள். ஒவ்வொரு நாளும் 14 மணி நேரம் பாவசங்கீர்த்தனம் கேட்பார். பல திசைகளிலிருந்தும் பெரியோரும், சிறியோரும் இவரிடம் ஆலோசனை கேட்க வந்தார்கள்.

ஏழைகள் மீது இவர் இரக்கம் உள்ளவர். அவர்களுக்கென்று விடுதி ஒன்றைத் தொடங்கியிருந்தார். விடுதியின் பெயர் "தேவ பராமரிப்பு" 80 பேர்களுக்கு ஒவ்வொரு நாளும் உணவு கொடுக்க வேண்டும். ஒரு நாள், இரண்டு ரொட்டி சுடவே மாவு இருந்தது. இவர் கடவுளை மன்றாடினார். ரொட்டி சுடச்சுட மாவு குறையாமல் வந்து கொண்டேயிருந்தது. ஒவ்வொன்றும் 20 பவுண்ட் நிறையுள்ள 10 ரொட்டிகள் சுட்டார்கள். அதற்கு 1 சாக்கு மாவு தேவை. சில நாட்களில் களஞ்சியத்தில் ஒன்றுமே இராது இவரது வேண்டுதலால் களஞ்சியம் நிறைந்து விடும். இவருக்கு மனிதர்களின் உள்ளத்தின் இரகசியங்கைள அறியும் வல்லமையுண்டு. ஒரு நாள் ஒரு வாலிபன் இவரிடம் வந்த போது "நீ திருமணம் செய்யக் கூடிய வயதாகி விட்டது; திருமணம் செய்துகொள்" என்றார். "கன்னியர் மடத்தில் சேர பல ஆண்டுகளாகக் காத்திருக்கிறாய். நீ சீக்கிரம் புனித சின்னப்பர் கன்னியிர் சபையில் சேரலாம்" என்று ஒரு பெண்ணிடம் சொன்னார். இன்னொருவரை நோக்கி "நீ குரு ஆவாய்" என்றார்.

இவர் ஆர்வம் நிறைந்தவர் எல்லையற்ற பொறுமை உள்ளவர். மிகுந்த தாழ்ச்சி உள்ளவர். யாவரும் இவருடன் பேசலாம். வெகு சொற்ப உணவே அருந்தி. சொற்ப நேரமே உறங்குவார். சாத்தான் அவருக்குப் பல ஆண்டுகளாக தொல்லை கொடுத்தான்.

**சிந்தனை:**

நீ செய்வதையெல்லாம் கடவுளுக்கு ஒப்புக்கொடு அவருக்கு ஒப்புக்கொடாமல் செய்யும் வேலை அனைத்தும் வீணே. (புனித மரிய வியான்னி அருளப்பர்)

**செபம்:**

புனித வியான்னி அருளப்பரே, பங்குக் குருக்கள் அனைவருக்காகவும் இயேசுவை மன்றாடும்.